ஸ்ரீ:

கம்பர் கண்ட கண்டீரவம்

(ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் தொகுத்தது)

கம்பர் தமது ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் இரணியன் வதைப்படலமென்று ஒரு படலமிட்டு அதில் இரணியாசுரனது செய்கைகளையும் நரசிங்கப் பெருமானது பெருமைகளையும் அபூர்வமாகவும் விரிவாகவும் கூறியுள்ளார். விபீஷணாழ்வான்-இராவணனுக்கு இதமுரைக்குங்கால் 'பண்டு இரண்யாசுரன் பட்டபாடுகளைக் கேளாய்' என்று தொடங்கிக் கூறுவதாக வைத்து இப்படலத்தைச் சேர்த்துள்ளார். இதிற் காண்கிற படியே சரிதம் வரையப் படுகின்றது.

— இரணியனது தவமும் வலிமையும் —

முற்காலத்தில் இரண்யகசிபு வென்று ஓர் அசுரர்தலைவன் இருந்தனன். அவன் அரிய பெரிய தவம்புரிகையில் அதற்கு உவந்து பிரமன் ப்ரத்யக்ஷமானபொழுது வேண்டியவாறெல்லாம் வரம்வேண்டி அவற்றைப் பிரமன் கொடுக்கப்பெற்ற பின்னரே அவன் தவத்தினின்று மீண்டனன். பஞ்சபூதங்களுக்கும் தனித் தனி எவ்வளவு வலிமையுண்டோ அவ்வளவும் அவன் ஒருவனே பெற்றிருந்தான். அப்படிப்பட்ட அவனது வலிமை அரனுக்குமயனுக்கும் அளவிட்டறிந்து அழிக்கவொண்ணாததாயிருந்தது. இந்த ஓர் அண்டத்தில் மாத்திரமேயன்றி எல்லா அண்டங்களிலும் அவன் பெயர் அனைவராலும் போற்றப்பட்டு வந்தது. பூமியின் கீழே எட்டுத் திசைகளிலும் நிலைநின்று பூமிபாரத்தைத் தாங்குகின்ற ஐராவதம் முதலிய அஷ்டதிக்கஜங்களுள் எவையேனும் இரண்டைத் தனது இரண்டு கைகளாலும் வலியப் பிடித்திழுத்து அவற்றை ஒன்றோடொன்று தாக்கிவிட்டு வேடிக்கை பார்ப்பது அவன் வழக்கம். கடல்களையெல்லாம் ஒரே தாண்டாகத் தாண்டி அப்பாற் செல்லுமியல்வினன்.

அவன் நதிகளிலும் நீராடான், காளமேகத்தினின்று சொரியும் நீரிலும் குளியான்; கடல் நீரிலும் படியான்; பின்னையோ வென்னில், அண்டகோளத்தை ஒரு பக்கத்தில் துளை செய்து அதற்கப்பாலுள்ள

பெரும்புறக்கடலின் நீர் அத்துளையின் வழியாக அண்டத்தினுள்ளே பெருக அதனைக்கொண்டே நீராடுவான். இங்ஙனம் நீராடி நாக லோகத்திலே சென்று அங்குள்ள நாககன்னிகைகளோடிருந்து நற்போகங்களைப் புசித்து, தேவேந்திரலோகத்திற் பகற்காலத்தைக் கழித்து இராப்பொழுதில் பிரமலோகத்திற் கொலுவீற்றிருப்பான். சந்திரன் ஏறிச்செல்லும் விமானத்தில் தான் ஏறித் திரிந்து அவனது அதிகாரத்தைத் தான் செலுத்துவான். அங்ஙனமே ஸூர்யனது தேரில் ஏறி நின்றுகொண்டு அவனது பெரிய பதவியின் அதிகாரத்தையும் தானே செலுத்துவான். அஷ்டதிக் பாலகர்களின் இடங்களிலிருந்து அவர்களுடைய தொழில்களையெல்லாம் கைக்கொண்டு நடத்துவான். மேருமலையுச்சியில் பிரமன்போல அரசாட்சி புரிந்து கொண்டு வீற்றிருப்பான். பஞ்சபூதங்களுக்கு அதி தேவதைகளாகிய தேவர்களை அந்தந்தப் பதவியில் நின்று ஒழித்து அவர்களின் தொழில்களையும் தானே நடத்துவான்.

— இரணியனது மேம்பாடுகள் —

உலகங்களில் அவரவர்கள் வைதிகலௌகிக ஸமயங்களில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திருநாமங்களைக் கூறும் வழக்கத்தை அறவே யொழிக்கும்படி அச்சமுறுத்தித் தனது இரணியனென்ற பெயரையே கூறும்படி செய்து வந்தனன். அன்றியும், முனிவர் முதலியோர் யாகங்களில் மந்திரபூர்வமாகத் தேவர்களை யுத்தேசித்து இட்டு ஓமஞ்செய்கிற ஹவிர்ப்பாகங்களை யெல்லாம் தானே கைக் கொண்டு உண்பான். த்ரிமூர்த்திகளும் தம் தம் தொழில்களைச் செய்து முடிக்க மாட்டாதவர்களாய்த் தங்கள் உரிமையை விட்டொழிப்பாராயினர். யோகப் பயிற்சியில் தேர்ந்த முனிவர்களும் தம் யோகபலத்தாற் பெறும் பதவிகளைப் பெறுது அவனால் இழந்து விட்டார்கள். தேவர்களும் அவனது பாதங்களை யன்றி வேறொன்றைப் பூசிக்க விரும்பாதாராயினர்.

—இரணியன் சாவா வரம் பெற்றது—

இவ்விரணியன் தனது பாதங்களைத் தரையிலே ஊன்றி வைப் பானாயின் பூமியைத் தாங்கும் ஆதிசேஷனும் மயங்கித் தளர்வான்; எழுந்து நிற்பானானால் அண்டகோளத்தின் மேல் முகடு தலையிற்படும் படி அதுவரையிலும் உயர்வான்; இடம் விட்டுச் சஞ்சரிப்பானானால்

தனது வலிய விசையால் பஞ்ச மஹா பூதங்களும் தன்னோடு கூடவே நிலை பெயர்ந்து வர அவற்றுடனே நடப்பான். அவன் தான் பெற்ற வரத்தினால் பெண்களாலும் ஆண்களாலும் நபும்ஸகராலும் மற்றுமெந்தப் பிராணிவர்க்கங்களாலும் உயிரில்லாதவற்றாலும், மற்றும் கண்களாற் காணப் படுங்காட்சிப் பொருள்களுள் எதனாலும், மனத்தாற் கருதப்படுங் கருத்துப் பொருள்களுள் எதனாலும் இறக்கமாட்டான். பூமியிலும் சாகமாட்டான், ஆகாயத்திலும் சாகமாட்டான். தேவர்களாவது யக்ஷர்களாவது திரிமூர்த்திகளாவது தன்னைக் கொல்லப் பெறான்; வலிமை சிறிதும் ஒடுங்கான். வீட்டினுள்ளேயும் வெளியிலேயும் சாவான். அஸ்த்ர சஸ்த்ரங்களாலும் கொலையுண்ண மாட்டான். இரவிலுஞ் சாவான். பகலிலுஞ் சாவான். இங்ஙனே பலவகைகளையும் பகுத்துக் கூறிச் சாவர்வரம் பெற்றிருந்தான்.

—இரணியன் தன்மகனான பிரகலாதனைப் பள்ளியிலோத விடுதல்—

இங்ஙனம் மஹா வீர சூரனான இவ்விரணியனுக்கு ப்ரஹ்லாதனெனும் பெயருடைய அருமைப் புதல்வனொருவனிருந்தான். அவன் அறிஞர்களிற் சிறந்த அறிஞன். தூயவர்களில் தலைவனான தூயவன்; பகவத் பக்தர்களில் மேம்பட்ட மஹா பக்தன். பல சொல்லியென்? ஸகல ஸத்குண ஸம்பன்னன். இளையோனான அவனைத் தந்தையாகிய இரணியன் வெகு அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்து மிக்க உவப்புடனே ஒரு நன்னாளில் கல்விபயிலத் தொடங்குமாறு கட்டளையிட்டனன். உடனே அசுரகுருவை வரவழைத்து 'என் அருமைக் குழந்தைக்குக் கல்விபயில்விப்பாயாக' என்று சொல்லிக் குமாரனைக் குருவிடம் ஒப்புவித்தனன்.

—பிரகலாதன் 'ஹிரண்யாய நம:' என்னப் பொறாமை—

உடனே மைந்தனைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று கல்வி கற்பிக்கத் தொடங்கிய ஆசிரியன் "ஹிரண்யாய நம:" என்று முந்துறச் சொல்லி ஆரம்பம் செய்கிற வழக்கப்படி ப்ரஹ்லாதனை நோக்கிக் கட்டளையிட்டவுடனே அச்சிறுவன் தனது இரண்டு காதுகளையும் இரண்டு கைகளால் நன்றாக மூடிக்கொண்டு 'பெரியோனே! நீ சொன்னபடி சொல்வது நல்லொழுக்கமன்று; முறைக் கேடு' என்று கூறி மறுத்து, வேதாந்த விழுப்பொருளான உண்மைக் கடவுளின் திரு

நாமத்தை வெளியிட்டுக் கூறினன். திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை உரக்க உச்சரித்து, உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம்பெலாம் கண்ணநீர் சோர நின்று முடி மீது அஞ்சலி செய்து ஸ்ரீமந்நாராயண னைத் தியானித்து உள்ளம் பூரித்திருந்தான்.

— அசுரகுரு பிரகலாதனைக் கடிந்து கூறல் —

அதுகண்டு அந்தக் குரு உள்ளமும் உடம்பும் நடுங்கப்பெற்று, 'கெடுவாய்! குருவாகிய என்னையுங் கெடுத்து மாணுக்கனுகிய உன்னையுங் கெடுத்துக்கொண்டாய். நமது பகைவர்களான அந்தத் தேவர்களும் சொல்லத்தகாததாய் என் வாயால் அநுவாதம் செய்யவும் தகாததான வொரு வார்த்தையை நீ சொல்ல மனங்கொண்டது என்னே! இது என்ன ஆச்சரியம்! இப்படியும் ஒரு காரியம் செய்து விட்டாயே! என்று பொடிந்தான்.

— பிரகலாதனுக்கும் குருவுக்கும் ஸம்பாஷணை —

பிரகலாதன்:—குருவே! என்னை நான் ஈடேறச் செய்துகொண் டேன், எனது தந்தையையும் ஈடேற்றினேன்; எனக்குக் குருவாக அமைந்த உம்மையுமீடேற்றி இவ்வுலகத்தின்கணுள்ள எல்லாவுயிர் களையுமீடேற்றத் தொடங்கி முதுவேதத்தின் ஸாரமாகிய நாராயண நாமத்தைச் சொன்னேன், இதில் என்ன குற்றம்? சொல்லும்.

குரு:—பயலே! உன் தந்தையானவர் தேவர்களனைவர்க்கும் தலைவர்களான திரிமூர்த்திகளுக்கும் தலைவர்; அவரது திருநாமத்தை மதித்திருக்கின்ற என்னிற்காட்டிலும் நீ அறிஞனோ? அடா! இப் பொழுது நீ சொன்ன பெயரை மறுபடியுஞ்சொல்லி என்னைக் கெடுக் காதேகொள்.

பிரகலாதன்:—முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த் தியின் திருநாமமல்லது மற்றொன்று நானறியேன். அந்தத் திருமால் எப்பொழுதும் எனது உள்ளத்துள்ளே உறைகின்றார். அவரது திரு நாமத்திற்காட்டிலும் சிறந்த சொல் வேறில்லை. வேதமறிந்த முனி வர்களும் உபநிஷத்துக்களும் ஒரு முகமாகக்கொண்டாடும் தெய்வத்தின் திருநாமத்தையன்றோ நான் சொல்வது. இதனில் மிக்கதோர் திரு நாமம் உலகில் உளதோ? வேதங்களைக் கொண்டும் மற்றுமுள்ள

பல்வகைச் சாதனங்களைக் கொண்டும் சித்திபெறும் மஹாத்மாக்கள் ஜபஞ்செய்யும் திருமந்திரத்தையன்றோ நான் கூறினேன்; வனங்களிலும் பெரியமலைகளிலும் வசித்துத் தவவேடம் பூண்டு முத்தியடைபவர்கள் பெறும் ஆனந்தத்தை யன்றோ நான் இத்திருநாமத்தினால் பெற்றது; இத்திருநாமத்தின் மகிமை அளவிடக்கூடியதோ? பல ஆசிரியர்களிடம் பலகால் கேட்டு உணரவேண்டிய பல நூற்பொருள்களையும் நான்கு வேதங்களின் உட்பொருள்களையும் இத்திருநாமத்தினின்றுமே உண்மைப்பத்தர்கள் உணரப் பெறுவர்கள். எனக்கும் நான்முகன் முதலிய தேவர்கட்கும் ஸர்வஜ்ஞனான தனக்கும் அறிய நிலமல்லாத வைபவங்களையுடைய ஸ்ரீமந்நாராயணன் என்மனத்திற் குடிகொண்டுளன்; ஆதலால் நான் மெய்ப்பொருள் கண்டவனாயினேன்; உனக்கும் இப்பொருளே காண் தஞ்சமாவது—என்று இனைய பலவுங் கூறினன்.

—பிரகலாதனை இரணியனிடம் கொண்டு சேர்த்தது—

இவ்வளவுங் கேட்ட ஆசிரியன் அச்சிறுவனுக்கு யாதொரு மறுமொழியுங் கூறமாட்டாதவனாய் மனங்கலங்கி 'இனி நான் ஈடேறும் வழி என்னே! எனக்கு அழிவுகாலம் வந்திட்டதுபோலும்' என்று சிந்தித்துக்கொண்டு ஓடிச்சென்று இரணியனிடம் சேர்ந்து கனாக் கண்டவன் அதிசயங் கூறுமாறு போலக் கூறத் தொடங்கி, "மஹாப்ரபுவே! உனது மகன் நெஞ்சால் நினைத்தற்கும் வாயாற்சொல்லுதற்கும் தகாததானவற்றைச் சொல்லிக்கொண்டு கல்வி பயிலாதிருக்கின்றனன்" என்றான். அதுகேட்ட இரணியன் குருவை நோக்கி என் மகன் சொன்ன வற்றைச் சொல்லாய் என்றான். அதற்குக் குரு தலைமேல் அஞ்சலி செய்துகொண்டு "நாதனே! காதுக்கு நாராசம் போன்ற அச்சொல்லை நான் உனக்குச் சொன்னால் நரகத்தையடைவேன், நாவும் வெந்து போம்" என்றான். அதுகேட்ட இரணியன் 'எனது புதல்வனை வெகு சீக்கிரமாக இங்கு அழைத்து வாருங்கள்' என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட, அவர்கள் ஓடிச்சென்று ப்ரஹ்லாதனிடம் தந்தை கட்டளையைத் தெரிவிக்க, உடனே அவன் தாதையிடம் வந்து வணங்கி நின்றான். அன்னவனை இரணியன் மார்பாரப் புல்கி அருகே உட்கார வைத்து, 'குழந்தாய்! உனது குரு வெறுக்கும்படி நீ ஏதோ தவறாகச் சொன்னாயாமே, அச் சொல் யாது? சொல்லு' என்றான்.

—பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் ஸம்பாஷணை—

ப்ரணவஸ்வரூபியாய் உலகுக்கெல்லாம் ஒப்பற்ற தனி நாயகனான கடவுளின் திருநாமமே யான் கூறியது. உபதேசமாகக் கேட்டுணர்தற்கும் சிந்தனை செய்தற்கும் பிறவித் துன்பக்கடலைத் கடத்தற்கும் மிக உரியதான இத் திருநாமத்திற் காட்டிலும் சிறந்தது வேறொன்றுமில்லையே; குரு வெறுக்கத்தக்கதொன்றும் யான் சொல்லவில்லையே.

இரணியன்:— (குரு பொய் சொல்லியிருக்க மாட்டார்; உள்ளது உள்ளபடியே கூறுமியல்பினராதலால் அவர் சொன்னதில் பொய்ம்மை ஒன்றுமிராது; குற்றமிருப்பின் தண்டிப்போம் என்று எண்ணி) குழந்தாய்! நீ சொன்ன அச்சொல்லை விளக்கமாகக் கூறுவாயாக என்றான்.

பிரகலாதன் :— அறம் பொருளின்பங்களுள் விரும்பிய பலன்களையெல்லாம் கொடுப்பதும் மோக்ஷத்தையளிப்பதுமான எம்பிரான் திருநாமமே நான் சொன்னது; அதற்குத் தான் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரமென்று பெயர். எல்லா உலகங்களிலும் சராசரப் பொருள்கள் அனைத்தின் உணர்ச்சியும் செல்லுதற்கு ஏற்ற இடமாவது அந்தத் திருவெட்டெழுத்தேயாம். சிவபிரான் நான்முகக் கடவுள் முதலாகச் சாதாரண மனிதர்களளவும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர் இறந்தவரேயாவர். இதன் மகிமை பிறர்க்கு விவரித்துக் காட்டமுடியாது; நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கவல்ல தெள்ளியஞானம் படைத்தவர்களே இதன் மகிமையை நன்றாகக் கண்டறிந்துள்ளார்கள். அல்லாத பிறர் சிறிதுமறியார். ஸம்ஸாரக் கடலைக் கடக்கச் சிறந்த மரக்கலமாயுள்ளதும், எல்லோர்க்கும் ஆபரணம் போலப் பொலிவு செய்வதும், மங்கலச் சொற்களுள் தலைமை பெற்றதும், உபநிஷத்துக்களின் சித்தாந்தமான தத்துவப் பொருளுமாகப் பிரசித்திபெற்ற இத் திருமந்திரத்திற் காட்டிலும் சிறந்தது வேறில்லை. உனது உயிர்க்கும் எனது உயிர்க்கும் மற்றுமெல்லாவுயிர்கட்கும் இத் திருமந்திரமே எல்லா நன்மைகளையும் விளைக்கவல்லது என்று நன்றாக ஆலோசித்தே இதனை நான் சொன்னேன் என்று வெகு கம்பீரமாகச் சொல்லி முடித்தான்.

—இரணியன் பிரகலாதனிடம் விஷ்ணு நிந்தை செய்தல்—

பிரகலாதன் இங்ஙனஞ் சொல்லக்கேட்ட இரணியன், அடா பயலே! நான் பிறந்த நாள் தொடங்கி இன்றளவும், நீ குறித்த பெய

ரைச்சொன்ன வாயையும் சிந்தித்த நெஞ்சையும் என்னுடைய ஆணை சுடுமென்பது மூவுலகிலும் ப்ரஸித்தம்; அப்படியிருக்க இந்தப் பெயரை உனக்குச் சொன்னவர் ஆர்? நீ இதனை யாருடனே கற்றுக் கொண்டாய்? மும்மூர்த்திகளும் மற்றைத் தேவர்களும் முனிவர்களும் எப்பொழுதும் சிந்திப்பது என் கழலிணையே, துதிப்பது என் பெயரே; ஆதலின் அவர்களெல்லோரும் உனக்கு இந்தப் புதிய பெயரைக் கூறுவதற்கு அஞ்சுவர்களே; பிள்ளாய்! இதனை நீ வேறு யாரிடத்து உணர்ந்தாய்? என்னோடு போர் செய்யும்பொருட்டுப் பலதரம் எதிர்த்துவந்து என் முன் நிற்க மாட்டாமல் கருடனது வேகத்தால் தப்பியோடிச் சென்று மறைந்து பாற்கடலிலே புகுந்தொளித்துக்கொண்டு இன்னமும் வெளிவராமல் உறங்குபவனாகிய விஷ்ணுவின் பெயரை உனக்கு எல்லா நன்மைகளையும் விளைவிப்பதாகக்கூறினவர் யாரோ? நம் குலத்தில் தோன்றிய எண்ணிறந்த பல பெரியோர்கள் அந்த விஷ்ணுவினால் அழிந்தவர்களாயிருக்க இதனை நீ அறிந்துவைத்தும் அவன் பெயரைச் சொல்லத்துணிந்த துர்ப்புத்திஎன்னோ? தன் இனத்திற்குப் பகையாகிய பாம்பின் பெயரை எலி பக்தியோடு கூறுவதுமுண்டோ? வலிமையிற் சிறந்த எனது உடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனை ஒரு பன்றியின் வடிவமாய்த் தோன்றிக் கொன்றவனது பெயரைப் பகர்வதற்காகவோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது?

—இரணியன் பிரகலாதனிடம் தன்பெருமை கூறிமுடித்தல்—

எவ்வுலகங்கட்கும் எவ்வுயிர்கட்கும் நானே தலைவனாகவும் நானே எல்லாப் பொருள்களையும் படைத்துக்காத்து அழிக்கவல்லவனாகவுமிருக்க இந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக்கொண்டு என்னையே முழுமுதற் கடவுளாகத் துணிதலை விட்டுக் காணப்படாதானொருவனைக் கடவுளாகத்துணிய உனக்கு மனம் வந்ததே! நீ வாழக்கடவையோ? ஆதிகாலத்தில் தவமகிமையினால் விஷ்ணுவென்றும் பிரமனென்றும் சிவனென்றும் சிறந்த நிலைமையை யடைந்தவர்கள், யான் பின்பு கொடுந் தவம் புரிந்து தலைமையை யடைந்ததனால் எனது பாதுகாப்பின் கீழ் அடங்கியுள்ளார்கள். அசுரர்களாகிய நமக்கு இயற்கையிற் பகைவர்களான திருமால் முதலிய தேவர்கள் என் சிறப்பைக்கண்டு அசூயை கொண்டு என்னினுஞ் சிறப்பாக யாகமும் தவமும் செய்வாராயின் அவர்கள் என்னினும் மேம்படக் கூடுமென்றெண்ணி நான் அவர்களை

அங்ஙனஞ் செய்யவொட்டாத படி எனது வலிமையால் தடுத்திட்டேன்; அன்றியும் அப்படிப்பட்ட சிறந்த யாகம் தவம் என்பவற்றின் தன்மையை அறியலாம்படி அவர்கள் சாஸ்த்ர விசாரஞ் செய்தலும் கூடாதென்று மறுத்திட்டேன்: ஆகவே அவர்கட்கு என்னிலும் மேம்பாடு அடைய ஒருபடியாலுமாகாது; ஆகையால் அவர்களெல்லாரும் என்னையே தங்களுக்கெல்லாம் கடவுளாகக் கொண்டு தங்கள் காரியங்களிலெல்லாம் என்னையே துதித்து வாழ்கின்றனர் காண்; பயலே! இப்போது நீ தவறு செய்ததை நான் பொறுத்தேன்; மீண்டும் இத்தன்மையனவான பயனற்ற வார்த்தைகளைச் சொல்லாதே: குருவின் கட்டளையே காக்கத்தக்கதென்று துணிந்து இனி அவரது கட்டளையின் படி கல்விபயில்வாயாக; போ,—என்று மிகுந்தகோவக்குறியுடன் சொல்லி முடித்தனன்.

—பிரகலாதன் இரணியனுக்குத் தத்துவ முணர்த்தல்—

இவ்வளவுஞ் சொல்லக்கேட்ட ப்ரஹ்லாதன் மீண்டும் தந்தையை நோக்கிச் சொல்லலுற்றான்;—அப்பா! உனக்கு நான் உணர்த்த வேண்டுவன புலவு முண்டு; கேளாய்: கல்விச் சாரமாக யான் சொல்லும் வார்த்தை சுருக்கமுடையதாயினும் பிறருடைய சாதாரணமான கல்வி ஞானம் முழுவதையும் தன் வசமாக்கவல்லது; அங்ஙனம் யான் சொல்வதைக் கேளாய். ''வித்தின்றி விளைவதொன்றில்லை'' என்னும் பழமொழி உனக்குத் தெரியாததன்றே. மூலகாரணப் பொருளாகிய கடவுளொருவரில்லாமல் பிரபஞ்சத்தோற்றம் நிகழாது காண். நீ கொண்டுள்ள விபரீத ஞானத்தை யொழித்து உண்மையை யுணர விரும்புவாயானல் தத்துவப்பொருளை உனக்குக் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காட்டித் தருவேன். ஆதியில் உலகங்களைப் படைத்தவனும் பிரளய காலத்தில் அவையனைத்தையும் தனது திருவயிற்றினுள்ளே அடக்கிவைத்துப் பாதுகாப்பவனும், எல்லாப் பொருளினிடத்தும் அந்தர்யாமியாய் எள்ளினுள் எண்ணெய்போல உள்ளும் புறமும் கலந்து பொருந்துபவனும் அவனே காண். வேதாந்தமாகிய உபநிஷத்துக்களில் தெளிந்து சித்தாந்தப்படுத்திக் கூறிய பரதத்துவம் அவனே காண். இத்தத்துவமுணரும் பாக்கியம் மாஞானிகட்கே உள்ளதொன்றும். சகலப் பிரபஞ்ச வடிவமாய்ப் பரிணமித்துப் பல் வேறு வகையாகத் தோன்றினும் தனது தனி நிலைமை மாறுபடாமலே யுள்ள அக்கடவுளின் தன்மை யாவராயினும் அறியும்படி ஓரளவிற்பட்ட

தாமோ? யாகம் முதலிய கிரிகைகளும் அவற்றின் பலனும் அப்பலன்களைக் கொடுத்தருளுகிற முதற் கடவுளும் அப்பயன்களைப் பெறுகிற ஜீவனும் அவ்வெம்பெருமானது சொரூபமே. அவனது பெருமையையும் அருமையையும் எவரேனும் அறிவரேல் துன்பக்கடல் கடந்து இன்ப வீடடைவர். சேதனர்கள் செய்யும் ஒவ்வொரு ஸுக்ருதமானது ஒவ்வொரு பலனை யளிக்கக் கூடியதேயன்றி ஒன்றே எல்லாப் பலன்களையுமளிக்கக் கூடியதன்று; அப்பரமனது கருணையோவெனின் நினைத்த நினைத்த பயன்களையெல்லாம் அளிக்கவல்லது பற்பல தேவர்களை உத்தேசித்துச் செய்யும் ஹோமங்களின் முடிவில் அத்தேவர்கட்கெல்லாம் தலைவனான திருமாலைக் குறித்து "ஓம் ஸ்ரீ விஷ்ணவே ஸ்வாஹா" என்று சொல்லி ஓர் ஆகுதி செய்வர்கள்; அந்த ஆகுதி ஸகலசராசரத்துக்கும் த்ருப்தியளிக்கும் தன்மையை நோக்கி அவ்வெம்பெருமானது உண்மையை யுணரலாம்.

—பிரகலாதன் நாராயணனது பெருமையைக் கூறிமுடித்தல்—

பிரமன் முதலிய உயிர்களெல்லாம் அப்பெருமானது திருநாபிக் கமலத்தின் ஒரு பகுதியிலே தங்கும். சிந்தைக்கும் கோசரமல்லனான அத்திருமால் காண்பவர்களினுடைய கண்களினுள்ளும் மறைந்துள்ளான்; மாஞானியர்களின் மனத்தில் நிறைந்திருப்பான்; பஞ்சபூதங்களிலும் அந்தர்யாமியாய் மறைந்துள்ளான். ஸகல பிராணிகளினுடையவும் மனமொழி மெய்களிற் பொருந்தியுள்ளான்: அவனது நிலைமையை ஆலோசிக்குமிடத்து, ஓர் அக்ஷரமாகிய ஓமென்னும் பிரணவத்தில் மறைந்துள்ளான், ஸகல வேதங்களிலும் விரிந்துள்ளான் என்னத்தகும். காமம் வெகுளி முதலிய தீய குணங்களைத் தன்னடியார்க்குத் தீர்த்தருள்கின்ற அத்திருமாலினது திருநாமங்களின் மகிமையும் அவனது படைப்பமைப்புக் கெடுப்புத் தொழில்களின் திறமும் எவராலேனும் சொல்லித்தலைக் கட்டறப்பாலனவோ? இங்ஙனம் ஒப்பற்ற பெருமைவாய்ந்த ஸ்ரீமந் நாராயணனை இகழ்வதனால் அந்தோ! நீபெற்றிருக்கின்ற செல்வங்களும் ஆயுளும் பெயரும் அழிவது மாத்திரமேயன்றி நிலைபெற்ற வுயிரையும் நீ யிழக்கின்றனையோயென்று நானிரங்கி அப்பெருமானது திருநாமத்தைத் துதித்து அவனை வாழ்த்தினேன்; என்ன பிழை செய்தேன் சொல்லிக் காண் என்று கூறி முடித்தான் (பிரகலாதன்).

— இரணியன் தன்மகனைக் கொன்றிடக் கட்டளையிடுதல் —

இவை கேட்டலும் இரணியனுக்குண்டான கோபம் வருணிக்க இயலாததாயிருந்தது. எல்லாவுலகங்களும் அஞ்சும்படியெழுந்த அக் கோவத்தின் உக்கிரத்தால் ஸூர்யன் முதலிய சோதிகளும் மேலுலகமும் சுழலலாயின; பூமியினிடங்கள் அசையலாயின; ரத்தத்தைச் சொரிந்த அவனது கண்களினின்று புகை மேலெழுந்தது; இங்ஙனம் கோபத்தின் எல்லையிலே நின்ற அவன் தனது பரிஜனங்களை நோக்கி 'இப்பாவிப் பயலுக்கு இதனைக் காட்டிலும் என்னோடு விளைக்கும் பகைமை வேறொன்றுமுள்ளதோ? வஞ்சனையாக என் குடலிலே ஊறியிருந்து இப்படிப்பட்ட பகைவடிவமொன்று உண்டாயிற்று; இவனதுஎண்ணத்தை இன்னமும் அறியவேண்டுவதில்லை; எனது தொன்று தொட்ட பகைவனான திருமாலுக்கு அன்புமிக்க தொண்டன் யானென்று கூசாது கூறுகின்ற இவனைக் கொன்றிடுங்கள்' எனக் கட்டளையிட்டனன். உடனே யமகிங்கரர்கள் போன்ற அசுரர் பலர்வந்து பிரகலாதனைப் பிடித்துக் கொண்டார்கள்.

— எவ்விதமான நலிவும் பிரகலாதனிடத்திற் பயன்படாதொழிதல் —

கோபாக்கினி சொலிக்கின்ற அஞ்சாத நோக்கை யுடையவர்களான அவ்வசுரர்கள் ஒரு யானைக் குட்டியைப் பல சிங்கக் கூட்டங்கள் வந்து சூழ்ந்து கொண்டாற்போல அப்பிரகலாதனைச் சூழ்ந்துகொண்டு அரண்மனை வாயிலின் பெரு வெளியிலே அவனைக்கொண்டு போய்ச் சேர்த்து ஆயிரக்கணக்கான மழுக்களையும் கூரிய வாட்படைகளையும் உயரவெடுத்து அவன்மீது வீசினார்கள்; உயிருடனே இவனுடலைத் தின்று விடுவோமென்று சொல்லிக்கொண்டு இடிபோல் பயங்கரமாக அதட்டினார்கள். அவர்கள் வீசியெறிந்த மழுக்களும் வாட்களும் பரம பக்தனான அவனை யாதொன்றும் செய்யமாட்டாவாயின! தாக்கவும் குத்தவும் பிளக்கவும் அவர்களெறிந்த ஆயுதங்களெல்லாம் அவனுடலிற் பட்டவளவில் முறிந்து நுண்ணிய துகள்களாயொழிந்து அவனுடம்பு முழுவதிலும் தினவு சொறிதல் போன்ற தன்மையையும் செய்யாவாயின; அங்ஙனமாக அவன் எம்பெருமானது இணைத்தாமரையடிகளையே மேன்மேலுஞ் சிந்தை செய்து கொண்டும் அவனது திருநாமத்தையும் உயர உச்சரித்துக் கொண்டும் விளங்கினன்.

— பிரகலாதனைப் பெருந்தீயினில் தள்ளுதல் —

பின்பு அவ்வசுரர்கள் இரணியனிடஞ்சென்று 'வலியோனே, எங்களிடமிருந்த சிறந்த பெரிய ஆயுதங்களெல்லாம் பொடியாய் விட்டன; அவற்ருல் உன் பிள்ளையினுடம்புக்குச் சிறிது தீங்கு முண்டாகவில்லை! இனி நாங்கள் செய்யவேண்டிய செயல் யாதோ? கட்டளையிடவேணும்" என்று கூற, அது கேட்ட இரணியன் "அப் பயல் மாயமனத்தனாதலால் அம்மாயையின் வலிமைகொண்டு ஆயுதங்களைக் கட்டிவிட்டான் போலும்; இருக்கட்டும். விரைவாக நெருப்பை மூட்டி நிறைத்து அதில் அவனைத் தள்ளுங்கள்" என்றுரைத்தான்; அங்ஙனமே அவ்வசுரர்கள் நெருப்பை மூட்டுந் தொழிலிலே முயன்று நின்ருர்கள். ஒரு பெருங்குழியிலே விறகுகளை மலைபோல் உயரமாக அடுக்கி, குடங்குடமாக எண்ணெயையும் வெண்ணெயையும் நெய்யையும் சொரிய, நெருப்பு வானத்தளவு மெழுந்து சொலிக்க அதில் பிரகலாதனையெடுத்துப் போட்டார்கள். அப்போது அவன் ஹரிநாமஸங்கீர்த்தனமே செய்துகொண்டிருக்கவே அந்த நெருப்புக் குளிர நின்றது.

— அஷ்ட மகாநாகங்களும் அமுதமொழுகநின்ற அதிசயம் —

உடனே அசுரர்கள் இரணியனிடம் ஓடிச்சென்று "மகாப்பிரபுவே! உன் மைந்தனைச் சுழன்றெரிகின்ற நெருப்புமிக்க பெருங்குழியிற் பொகட்டபொழுதும் அந்த நெருப்பு அவனை எரிக்கவில்லை; இனி மற்றும் நாங்கள் செய்யத்தக்கது யாது?" என்ன, இரணியன் கோபாக்னி பொங்கி யெழுகின்ற கண்ணினனாய் "என் கட்டளைக்கு இணங்கி நடவாத அக்நிதேவனையும் கட்டிக் கொடிய சிறையில் வைத்திடுங்கள்; எனது கள்வக்குமாரனைப் பிடுங்கித்தின்னுமாறு அஷ்டமகாநாகங்களையும் அவன்மேல் ஏவுங்கள்" என்றனன். அவ்விரணியன் நினைத்த மாத்திரத்தில் அனந்தன் முதலான அஷ்டமகாநாகங்கள் அங்கு வந்துசேர்ந்து ப்ரஹ்லாதன் மேற்பாய்ந்து தம் விஷப்பற்கள் அழுந்த ஊன்றிக் கடிக்கவும் ஸ்ரீ சேஷசயனனான ஸ்ரீமந் நாராயணனிடத்துப் பரமபக்தியே வடிவெடுத்த அச்சிறுவன் சிறிதும் வருந்திற்றிலன். பாம்புகளுக்கு வைரியாகிய கருடனும் நடுக்கமடையும்படி அந்த அஷ்டமகாநாகங்கள் பிரகலாதனைக் கடித்துப் பிடுங்கியபொழுது அவற்றின் பற்கள் வலிமை யொழிந்து ஒடிந்து உதிர்ந்தன; கடிப்பதற்காக அவை பற்களை ஊன்றவைத்த பொழுது அவற்றின் துளைகளிலிருந்தெல்லாம் விஷம் பாயாமல் அமுதத் துளிகளே ஊறி யொழுகின.

— ஐராவத யானையும் அஞ்சி விலகிச்சென்ற அதிசயம் —

அங்ஙனமாக அசுரர்கள் இரணியனிடஞ் சென்று 'பிரகலாதனுடம்பைச் சூழ்ந்துகொண்ட நாகங்கள் அவனுக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டிற்றில' என்று புகலவே, திக்கஜங்களிற் சிறந்த ஐராவத யானைக்கு இவனை இரையாக இடுங்கள்' என்று சொல்லிவிட்டானிரணியன். உடனே தேவேந்திரன் தன் யானையை விரைவிற் கொணர்ந்தனன். அசுரர்கள் பிரகலாதனைக் கைகளிலும் கால்களிலும் மார்பிலும் கழுத்திலும் மந்திரப்பாசங்களால் இறுகக் கட்டி அந்த யானையின் எதிரிலே போட்டார்கள். அப்பொழுது பிரகலாதன் அந்த யானையை நோக்கி 'முற்காலத்தில் உன் இனத்தவனான கஜேந்திராழ்வான் முதலையினலிடர்ப் பட்டபோது முழுமுதற்கடவுளைக் கூவியழைக்க அப்பெருமான் வந்து இடர்தீர்த்த செய்தி உனக்குத் தெரிந்திருக்கலாமே; அப்பெருமான் காண் எனதுள்ளத்தினுள்ளே யுறைகின்றான்' என்று கூற, உடனே அந்த மதயானை தலைவணங்கி நமஸ்கரித்து அஞ்சி விலகிச் சென்றது.

— பிரகலாதன் கடல்வெள்ளத்திலே காட்சியளித்த அதிசயம் —

இச்செய்தியை அசுரர்கள் வந்து சொல்லக்கேட்ட இரணியன் மனங்கொதித்து அவ்வசுரர்களை நோக்கி 'வீரர்காள்! திருமாலை மதித்து எனது கட்டளையை அவமதித்த இந்த யானையை நீங்கள் சென்று கொல்லுங்கள்' என்று கட்டளையிட அவர்களும் அப்படியே அக்களிற்றைக் கொல்வதாக நெருங்கிய வளவிலே அது அஞ்சித் தனது தந்தத்தால் பிரகலாதனைக் கொல்ல வந்தது. அப்போது அவனது மார்பிலே அழுத்தின தந்தங்கள் நான்கும் வாழைத்தண்டுபோல் எளிதில் ஒடிந்தன. இச்செய்தியையும் அசுரர்கள் இரணியனிடஞ் சென்று அறிவித்து 'உன் மகனது உயிர் கவர்தற்கு அரிதே' என்று கூற, அதுகேட்டவிரணியன் கோடைக்காலத்துச் சூரியனிலும் உக்கிரமான கண்களையுடையனாய் 'அப்படியாயின் ஒருவராலும் அசைக்க முடியாத பெரிய மலையுடனே அவ்வஞ்ச மகனை இறுக்கிக் கட்டிக்கொண்டு போய்க் கரை காணவொண்ணாதகடல் வெள்ளத்திலே தள்ளிவிடுங்கள்' என்று ஏவினான். இவர்களும் விரைந்து சென்று இங்ஙனமே செய்ய, அக்கடல் தானும் பிரகலாதனது பக்திப் பிரபாவத்தினால் சிறிய மடுபோன்றதாய் அவனைச் சார்த்திக்கட்டிய மலையும் சுரைக்குடுவை போன்றதாயிற்று.

ஆகவே அச்சிறுவன் கடலிலே அழியாமல் மிதந்து மேலே பொருந்தியுள்ள மலையின்மீது படுத்தபடியிருந்தவனாய் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸங்கீர்த்தனத்தில் ஊன்றிவிட்டான். பிரளய வெள்ளத்திலே ஆலிலையின்மீது சிறு குழவியாய்ச் சயனித்த திருமால் போலக் கடல் வெள்ளத்திலே மலையின் மீது பள்ளிகொண்டு அபாய லேசமுமின்றிப் பொலிகின்ற பிரகலாதன் தலைமேல் கூப்பிய கையனாய் உறுதிநிலை தவறாத மனத்தனாய்த் திருமாலைத் துதி செய்யலுற்றான்.

— இரணியன் பிரகலாதனை விஷமூட்டி வதைக்க நினைத்தல் —

மலையோடு கட்டிக் கடலிற் பொகட்டும் பிரகலாதன் இறவாதிருத்தலையும் அவன் திருமாலைப் பலவாறு துதி செய்துகொண்டிருத்தலையும் அசுரர்கள் வந்து சொல்ல அறிந்த இரணியன் 'உடனே அவனைக் கொணர்ந்து என் முன்னே விடுங்கள். இவன்கொண்ட பைத்தியம் நீங்கும்படியான உபாயத்தைச் செய்வோம்; அதாவது கொடிய விஷத்தினாற் கொல்வோம்' என்று கொதித்துக் கூறினன்.

— பிரகலாதன் சம்மட்டியடிகளுக்குச் சலியாத தன்மை —

உடனே அசுரர்கள் பிரகலாதனுக்கு மிகக் கொடிய விஷத்தை ஊட்டினார்கள்; அதனால் அவன் சிறிதும் மயக்கமில்லாதிருந்தான். பிறகு இரணியன் கொடிய குதிரைச் சம்மட்டிகளால் அடித்துக் கொல்லும்படி ஏவினான்; அதுவுஞ் செய்து பார்த்தார்கள். எண்ணிறந்த பல்லாயிர வசுரர்கள் சம்மட்டிகளால் வீசியடித்தபோது, காண்பாரனைவரும் இனியிவன் பிழையான் என்னும்படியாகவே யிருந்தது; ஆயினும் பிரகலாதன் 'தோள்களாயிரத்தான் முடிகளாயிரத்தானான எம்பெருமான் என்னுள்ளத்துள் உறையும்போது எனக்கென்ன குறை' என்றே சிரித்துக்கொண்டு சொல்லிக்கொண்டிருந்ததனால் ஒருவகையான அபாயமு முற்றிலன்.

— பிரகலாதன் தந்தைக்குக் கூறிய நன்மொழி —

என்ன செய்தும் பிரகலாதன் இறவாததைக் கண்டு இரணியன் இந்தப் பயல் அசுரர்கட்கு உரியதொரு மாயையினால் இறவாதிருக்கைக்கு உரிய உபாயத்தை இயல்விலே உடையான் போலும்; இருக்கட்டும்; இனி இவனுயிரை யானே கவர்வேன்' என்று சொல்லிச் சீறிச்

சிவந்து உறுமிக்கொண்டு சிறுவனருகில் வந்தனன். வந்த தந்தையை மைந்தன் வணங்கி 'எந்தாய்! எனது நிலைபெற்ற வுயிரை நீ கவர்ந்து கொள்ள நினைத்தாயெனினும் இவ்வுயிர் உனது வசத்திலுள்ளதன்றே; ஸகல லோகங்களையும் ஒருங்கு படைத்தருளியவரான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே கொள்ளும்படி யுள்ளதன்றோ இவ்வுயிர்; எதுக்கு வீண் பிரயாஸம்?' என்றனன்.

— இரணியனுக்கும் பிரகலாதனுக்கும் ஸம்பாஷணை —

இரணியன்:—பயலே! நீ சொல்லுகிறபடி உலகங்களைப் படைத்தவர் எவர்? என் பெயரைத் துதித்துக்கொண்டு வாழ்கிற திரிமூர்த்திகளா? அல்லது என்னையே ஏத்தி யிறைஞ்சுகின்ற முனிவர்களா? அல்லது தங்களுடைமைகளையெல்லாம் எனக்குத் தோற்று இழந்த தேவர்களா? அல்லது மற்றும் யாரேனுமா? விளங்கச் சொல்லடா. அவனை நான் காணமுடியுமாகில் காட்டுதலும் செய், பார்ப்போம்.

பிரகலாதன்:-தந்தையே! உலகங்களைப் படைத்தவனும் அவ்வுலகங்களிலுள்ள பல பிராணிகளைப் படைத்தவனும் அவற்றுள் அந்தர்யாமியாய் உறைபவனும் யாவனென்னில், மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் போல எங்குங் கலந்து நிறைந்திருக்கின்ற திருமாலே காண். அப்பெருமான் என் கண்களாற் காணுமாறு எங்குமிருக்கின்றான்! 'இவ்வுண்மையை உனக்கு நான் உள்ளபடியுரைத்தால் இது நிச்சயமானதென்று நீ ஏற்றுக்கொள்ளுகின்றிலை; இங்ஙனம் நீ நம்பிக்கை கொள்ளாததனால், உனது சகோதரனான ஹிரண்யாக்ஷனது உயிரைக் கவர்ந்த அத் திருமால் உனது கண்களாற் காண எளியவனாவனோ?

இரணியன்:— (அது கேட்டுச் சிரித்து) பயலே! நீ சொன்னவொருவன் எப்பொருள்களிலும் உட்புகுந்து வசிக்கின்றானென்பதை நன்றாகச் சோதித்துப் பார்த்துப் பின்பு அதற்கேற்ற காரியத்தைச் செய்வேன், நீ சொன்ன அந்தத் திருடன் இந்தத் தூணினுள்ளே மறைந்து நின்றுள்ளானாயின் அவனது அந்நிலைமையை திருஷ்டாந்தப் படுத்துவாயாக.

பிரகலாதன்:-யான் சொன்ன அந்த எம்பெருமான் ஓர் அணுவை நூறு கூறாகப் பகிர்ந்த பகுப்பிலுமிருக்கிறான், மகா மேரு மலையிலு

மிருக்கிருன், இவ்விடத்துள்ள இத்தூணிலுமிருக்கிருன்; நீ அவனேக் குறித்து இகழ்ச்சியாகச் சொன்ன சொற்களிலுமிருக்கிருன்; இவ்வுண்மையை நீ விரைவில் சோதித்து அறிவாயாக.

இரணியன்:— உலகம் முழுவதிலும் வியாபித்துள்ளவனுக நீ சொல்லும் அத்திருமாலே இந்தத் தூணினிடத்தே நான் காணுமாறு நீ காட்டாமற் போவையாளுல் யானேயைச் சிங்கம் கொல்வதுபோல உன்னே யானே எளிதிற் கொன்று உனது இரத்தத்தைக் குடித்து உன்னுடலேயும் தின்பேன்.

பிரகலாதன்:- தந்தையே! என்னுயிர் உன்னுற் கொல்லப்படுதற்கு எளியதன்று; நான் சொன்னபடி திருமால் நீ தொட்ட இடங்களிலெல்லாம் வெளிப்பட்டுக் காணப்படாமற் போவனுயின் என்னுயிரை நானே மாய்த்துக்கொள்வேன்; அங்ஙனம் செய்யாமல் பின்பும் இவ்வுலக வாழ்க்கையை விரும்பி ஜீவித்திருப்பேனுயின் அப்பெருமானுக்கு நான் அடியவனல்லேன்.

இங்ஙனம் பிரகலாதன் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கூறினது கேட்ட இரணியன் பரிஹாஸக் கருத்துடன் சிரித்துக் கோபித்து எதிரிலுள்ள ஒரு தூணிலே கனவேகமாகத் தன் கையாலறைந்தான். அங்ஙனம் அறைந்தவளவிலே அதனுள்ளே சிவந்த கண்களேயுடைய சிங்கமொன்று தனது ஆரவாரத்தால் திக்குக்களேக் கிழித்து அண்டகோளத்தைப் பீறிக்கொண்டு சிரித்தது. திருமால் அங்ஙனம் சிங்க வடிவத்தோடு தூணினுள்ளே சிரித்தவுடனே பிரகலாதன் பெருமகிழ்ச்சி கொண்டு கூத்தாடினன்; ஆனந்தக் கண்ணீர்விட்டு அழுதனன், கீதம்பாடி ஆரவாரித்தனன்; தலேமேல் கைகூப்பினன்; கீழே விழுந்து வணங்கினன்; துள்ளித்துள்ளிக் குதித்தனன்; இனேய பலவுஞ் செய்தனன்.

இரணியனே வென்னில் அச்சிரிப்பைக் கேட்டு 'யாரடா நீ? இப்பயல் சொன்ன திருமாலோ நீ? நீ முன்பு எனக்கு அஞ்சிப்புக்கு ஒளித்துக் கொண்டிருந்த கடலில் இடம் போதாதென்று இத்தூணேத் தேடி இதனுள்ளும் ஒளித்தாயோ அடா? என்னேடு நீ போர் செய்ய வல்லேயாகில் வெளிப்புறப்படடா' என்று கூசாது இகழ்ந்து கூறினன்.

— தூணினின்று திருமால் தோன்றிய அதிசயம் —

உடனே அந்தத்தூணும் பிளவுபட்டது; அவ்விடத்தினின்று சிங்கமூர்த்தியும் வெளித்தோன்றிற்று; அத்திருவுருவம் எட்டுத்திசைகளையும் அளாவி வளர்ந்தது; அண்டரண்ட பகிரண்டங்களையும் அளாவிற்று; அண்டகடாஹம் கீழும்மேலும் பீறிப் பிளந்தது. அந்த நரசிங்கமூர்த்தி வானத்தில் ஊடுருவிச்சென்ற எல்லையை அறியவல்லாரில்லை. திருவடிகள் பூமியிற்படும்படி நின்ற அச்சமயத்தில் ஸத்ய லோகத்திலிருந்த பிரமன் அப்பொழுதே அச்சிங்கப்பிரானது திருநாபியில் தோன்றியவன் போல விளங்கினன். [பிரமன் நரசிங்கமூர்த்தியின் நாபியளவிலே நின்றனனென்ற விதனால் அப்பெருமான் மேலோங்கிச்சென்ற எல்லையின் வரையறையரிய முடியாதென்றபடி], அப்பெருமானுடைய திருக்கைகளை இத்தனையென்று கணக்கிடவல்லார் ஆருமில்லை. தன்னெதிர்ப்பட்ட அசுர சேனையிலுள்ள ஆயிரங்கோடி பேரில் ஒவ்வொருவரையும் ஒவ்வொருகையால் அள்ளிக் கொண்டனனாதலால் அத்திருக்கைகளை எங்ஙனே எண்ணி முடிப்பது? ஆயிரங்கோடி வெள்ளமாக எதிர்ப்பட்ட அசுரசேனையிலுள்ள ஒவ்வொருவர்க்கும் எதிராக ஒவ்வொரு திருமுகம் ஈரிரண்டு திருக்கைகளும் அம் முகங்களிலெல்லாம் மூன்று திருக்கண்களுமாக அப்பொழுது எம்பெருமான் கொண்ட விசுவரூபம் அரியபெரிய காட்சியாக இருந்தது.

— நரசிங்கமூர்த்தியின் நிகரற்ற வாத்ஸல்யம் —

அச் சிங்கவடிவத்தின் பிடரியில் எழுந்து வளைந்து தொங்குகின்ற நீண்ட மயிர்த்தொகுதியானது பிரளய காலாக்னியின் 'ஜ்வாலைகளை வென்றிட்டது. அச்சிங்க மூர்த்தியின் உள்நின்று வெளிப்படுகிற சுவாசக் காற்றானது ஊழிக்காலத்துப் பிரசண்டமாருதத்தை வென்றிட்டது. பிரளயகாலத்தில் திருமாலின திருவயிற்றிலடங்கியிருந்த அண்டங்களும் சராசரங்களுமாகிய அனைத்தும் அதுபோலவே இப்பொழுதும் விசுவரூப நரசிங்கமூர்த்தியின் திருவயிற்றினுள்ளே அடங்கியிருந்தன. துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டுத் திருவவதரித்த அந்த நரசிங்கப்பிரான் கொடிய அசுரர்களைக் கொல்பவனாகி, அங்ஙனல்லாத சாதுக்களையெல்லாம் அப்பொழுது தன் வயிற்றினுள் வைத்துத் தாய்போலப் பாதுகாத்தருள்பவனாயினன்.

— நரஹரியின் சீற்றத்தின் சிறப்பு —

அச்சிங்கப்பிரான், கொடுமையிற் பெயர்பெற்ற அசுரர்களிற் பலரைத் தனது வக்கிர தந்தங்களில் அடக்கிக்கொண்டு கடித்து உட்கொள்வன்; பூமியிலே தேய்ப்பன்; புறவண்டங்களிலே மோதுவன்; மகா மேருமலையில் தாக்குவன்; விரல்களாற் பிசைந்திடுவன்; கடல் நீரினுள்ளே ஆழ அமுக்கி மேலே குமிழியெழும்படி செய்வன்; படபாமுகாக்கினியினுள்ளே இட்டுவாட்டுவன்; இருபிளவாகத்துண்டித்திடுவன்; வாட்களைப் பிடித்துக் கிழித்திடுவன்; வலியதோலை உரித்தெடுப்பன்; கண்களைத் தோண்டியெடுப்பன்; குடலைக் கைகளாற்பற்றித் தூண்டிப்பன்; தனது கைந்நக சந்துகளிலே பதுங்கிய அசுரர்களை மற்றை நகங்களால் அழுத்திக்கீண்டெறிவன். அவ்வசுரர்கட்கு வாகனமாகிய யானை குதிரை முதலானவற்றைக் கடித்துத் தின்றொழிப்பன். ஸப்தஸாகரங்களையும் பருகுவன்; வானத்திலுள்ள மேகங்களை இடிகளுடனே உட்கொள்வன். ஆக இப்படியான உக்கிரத்தைக்கண்டு "இந்த நரசிங்கமூர்த்தி எவ்வகையினும் கோபம் தணியாது போலும்" என்று தரும தேவதையும் அஞ்சி நடுங்கிற்று.

— இரணியன் நரசிங்கமூர்த்தியோடு போர்புரிதல் —

அக் கோளரியுருவன், இரணியனும் அவனது புதல்வனான பிரகலாதனும் தவிர மற்ற அசுரர்களையெல்லாம் வெகு விரைவிலே கொன்று நின்றனன்; இந்நிலைமையில் இரணியன் வாளும் கேடகமுமேந்திப் பேராரவாரஞ்செய்து உதட்டை மடித்துக்கொண்டு சீறிச் சிவந்து அச்சிங்கமூர்த்தியோடு போர் செய்யுமாறு எதிரிற் சலியாது நின்றனன். அங்ஙனம் நின்றபடியைப் பிரகலாதன் நோக்கி, 'எனது அருமைத் தந்தையே! இந்த நரசிங்கமூர்த்தியின் நிலைமையைப் பார்த்தும் உன் உள்ளத்தில் சிறிதும் நல்லறிவு கொண்டனையில்லை போலும்; இப்பொழுதாகிலும் எனது திருமாலை வணங்கமாட்டாயோ? வணங்கின அளவிலேயே அப்பெருமான் உனது குற்றங்களையெல்லாம் பொறுத்தருள்வான்'' என்று இதமுரைத்தனன். அதுகேட்ட இரணியன் "அடா பயலே! ஒருநொடிப் பொழுதில் இச் சிங்கத்தின் தோள்களையும் தாள்களையும் வெட்டித்தள்ளி உன்னையும் துண்டித்து, அங்ஙனம் வெற்றிதந்த எனது வாட்படையையான் வணங்குவதேயல்லாமல் பிறரை வணங்குவதென்பதுமுண்டோ?" என்று சொல்லி நகைத்தனன்.

— பகவான் இரணியனை முடித்து பக்தாநுக்ரஹம் செய்தல் —

நகைத்ததோடும் நில்லாமல் மிக்க கோபங்கொண்டு அந்நரசிங்க மூர்த்தியை எதிர்த்தற்கும் நெருங்கினன். அப்போது அத்

திருமால் மிகப் பலவான தனது கைகளினாலும் கால்களினாலும் அவ்விரணியனைச் சூழ்ந்துகட்டிப்பிடித்தனன். தனது பெரிய கைகளிலொன்றினால் அவ்விரணியனது கால்களிரண்டையும் ஒருசேரப் பிடித்துச் சுழற்றினன். அப்போது இரணியனது காதுகளிலணிந்திருந்த இரண்டு கனமகரக் குழைகளும் சிதறி நெடுந்தூரத்துக்கப்பால் சென்று விழுந்தொழிந்தன. இங்ஙனே அவனைப் படாதபாடுகள் படுத்தி மடியிடைவைத்துக் கைந்நகங்களை அவனது மார்பில் ஊன்றியவளவிலே இரத்தவெள்ளம் அபரிமிதமாகப் பெருகிற்று. அசுரர்கோமான் தொலைந்தொழிந்தனனென்று, இதுவரையில் அவனுக்கு அஞ்சியோடியொளித்திருந்த தேவர்கள் முதலியோர் அச்சமின்றி அங்குவந்து நெருங்கிநின்று தேறித் துதித்துவணங்க, சிங்கப்பிரான் சீற்றந்தணிந்து தன் கையில் அபயமுத்திரையைக் காட்டியருள, அப்போதும் பயந்தெளியாத தேவர்கள் பெரியபிராட்டியாரை அச்சிங்கப்பிரானருகில் செல்லும்படி பிரார்த்தித்து அனுப்ப, தன்னருகில் வந்த அத்திருமகளை அருளொடு நோக்கிச் சினந்தணிந்த சிங்கப்பிரான் பரமபக்தமணியான பிரகலாதனைப் பேரன்போடு கடாக்ஷித்தருளி “உனது தந்தையை உனது முன்னிலையிலே யான் உடம்பைப் பிளந்தளைந்துகொள்ளவும் மனந்தளராமல் என்னிடத்தே அன்பைச் செலுத்தியிருக்கின்ற உனக்கு யான் என்னவுதவி செய்வேன்!; உனக்குச்செய்ய வேண்டிய உதவி ஏதேனுமுளதாயின் சங்கோசமின்றி விரைவிற் சொல்வாய்” என்று கூறியருள; அதற்குப் பிரகலாதன் “திருமாலே! உனது திருவருளால் யான்பெற்ற நன்மைகளோ எல்லையிலாதன; இன்னமும் யான் பெறவேண்டிய நன்மை ஒன்றுளதோ? உளதாயின், யான் ஒரு புழுவின் சன்மத்தைப்பெற்றாலும் நின்பக்கல் பக்தி குன்றாதிருக்கப் பெறுதலே யான்வேண்டும் வரமாம்’ என்று கூற, திருவுள்ள மிரங்கிய திருமால், ‘அன்பர்தலைவ! பஞ்ச பூதங்களெல்லாமழிந்தாலும் அழியாமல் நீ என்னைப்போல எக்காலத்திலுமுள்ளவனாவாய்; எக்காலத்தும் மாறாது வளருமன்புடையையாவாய்’ என்று வரமளித்து, தேவர்களை நோக்கிப் பிரகலாதனுக்கு முடிசூட்ட முயலுமாறு நியமித்து அந்தர்த்தானமடைந்தனன். தேவர்களும் அக்கட்டளையின்படியே முடிசூட்ட, பிரகலாதன் அரசர்கட்குமரசனாய் மூவுலகங்களையும் தன்வசத்திற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனன்.